MISSION PRESS 1840

# சர்வவியாபி

SARVA VIABI

| 02-12-2018 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விளம்பி வருடம் கார்த்திகை 16 | வருட சந்தா ₹ 150<br>தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 55<br>வருடம்-112 | இதழ் 47<br>பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com<br>e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/<br>2334360 | ஆசிரியர்:அருள்தந்தை C. அந்தோனி ரோச் |
|---|---|---|---|---|


## திருத்தந்தை இயேசுவை சாலையில் சந்தியுங்கள்



இறையழைத்தலும், தெளிந்து தேர்தலும், தூய ஆவியாரின் மிகச் சிறந்த வேலையாகும். இளையோர் மற்றும் அவர்களுக்குப் பயிற்சியளிப்போரின் ஒத்துழைப்பு, இதற்கு அவசியம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தாலிய குருத்துவ மாணவர்கள் குழு ஒன்றிடம் கூறினார்.

இத்தாலியின் Agrigento உயர் மறைமாவட்ட பேராயர், கர்தினால் Francesco Montenegro அவர்கள் தலைமையில் வந்திருந்த ஏழத்தாழ நாற்பது குருத்துவ மாணவர்களை, நவம்பர் 24, இச்சனிக்கிழமையன்று வத்திக்கானில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எம்மாவுஸ் செல்லும் வழியில், உயிர்த்த இயேசுவை சந்தித்த சீடர்கள் பற்றி எடுத்துரைத்தார். எம்மாவுஸ் சென்ற இரு சீடர்களுக்கு இயேசு காட்சியளித்தபோது, அவர்களோடு நடந்து, அவர்கள் பேசுவதைக் கேட்டு, அவர்கள் உள்ளத்திலிருந்த நம்பிக்கை, மற்றும் ஏமாற்றத்தை வெளிக்கொணரச் செய்து, அவர்களை மறைப்பணிக்கு அனுப்பினார் என்றுரைத்த திருத்தந்தை, இயேசு செவிமடுக்கிறார். அவரோடு நடக்கின்றேன், அவர் பேசுவதைக் கேட்கிறேன், பின்னர், தெளிந்து தேர்வு செய்கிறேன் ஆகிய நான்கு கூறுகளை விளக்க விரும்புவதாக அக்குருத்துவ மாணவர்களிடம் தெரிவித்தார். குருத்துவ பயிற்சியில், ஆண்டவர் பேசுவதைக் கேட்பதும், அவரிடம் பேசுவதும் முதலிடத்தில் இருக்க வேண்டும் என்று கூறியத் திருத்தந்தை குருத்துவ கல்லூரி, அழத்தலை, தெளிந்து தேர்தலின் இடம் எனவும் எடுத்துரைத்தார். கடந்த அக்டோபரில் நிறைவடைந்த இளையோர் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றம் பற்றியும் குறிப்பிட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எருசலேமிலிருந்து எம்மாவுஸ் சென்ற இரு சீடர்களும், இயேசுவை சந்தித்த பின்னர் அவர்கள் மீண்டும் எருசலேம் சென்று, திருத்தூதர்கள் குழுவுடன் இணைந்து மறைப்பணியாளர்களாக மாறியதையும் விளக்கினார். மறைப்பணியில் தனியாளாக, சிறந்து விளங்க வேண்டு மென்று எழுகின்ற சோதனைக்கு உட்படாமல், குழுவாக இணைந்து பணியாற்றவும் கேட்டுக் கொண்ட திருத்தந்தை எம்மாவுஸ் சீடர்களை எடுத்துக்காட்டாக கொண்டு வாழுமாறு கூறினார். ●

## என்றும் நிலைத்திருக்கவல்ல இறையரசை வரவேற்போம் - திருத்தந்தை.

ஆயுதங்களின் உதவியுடன் அமைக்கப்படும் அரசுகள் நிலைத்து நிற்க முடியாமல் அழிந்து போவதை வரலாற்றில் கண்டுள்ள நாம், இயேசு அமைத்த அரசு ஒன்றே நீடித்து நிலைத்து நிற்பதைக் காண்கிறோம் என, தன் ஞாயிறு மூவேளை செப உரையில் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

உரோம் நகரிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், ஞாயிறு முழுவதும் மழை தூறிக் கொண்டிருந்தாலும், அதைப் பொருட்படுத்தாமல், 20,000 த்திற்கும் மேற்பட்ட மக்கள் புனித பேதுரு வளாகத்தை நிறைத்திருக்க, அவர்களுக்கு நண்பகல் மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வாறு கூறினார்.

படைப்பின் உயிர்நாடி என்பது, ஏதோ சந்தர்ப்ப சூழ் நிலைகளால் முன்னோக்கிச் சென்றுக் கொண்டிருக்கிறது என்பது உண்மையல்ல, மாறாக, வரலாறு மற்றும் படைப்பின் தலைவனாம் இயேசு கிறிஸ்துவின் முழுமையான வெளிப் பாட்டை நோக்கிச் சென்றுக் கொண்டிருக்கிறது என்றும், இந்தப் பயண வரலாற்றின் இறுதி நோக்கம், இயேசுவின் அரசாகும் என்றும் எடுத்துரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

தன்னிடம் கொண்டுவரப்பட்ட இயேசுவை நோக்கி, அவர் அரசரா என பிலாத்துக் கேட்டபோது, என் அரசு இவ்வுலக ஆட்சியைப் போன்றது அன்று, என்றும், அரசன் என்பது நீர் சொல்லும் வார்த்தை என்றும், இயேசு பதிலளித்ததைப் பற்றிக் குறிப்பிட்டதிருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அப்பம் பலுகிய புதுமைக்குப்பின், மக்கள், அவரை அரசராக்க விரும்பியதையும், இயேசுவோ அங்கிருந்து மறைந்து சென்றதையும் குறிப்பிட்டு, இயேசுவுக்கு அரசியல் ஆசைகள் இருந்ததில்லை என்பது, பலவேளைகளில் நிரூபிக்கப் பட்டுள்ளது என்றார்.

அரசியல் அதிகாரத்தையும் தாண்டி மேலான ஒன்று உள்ளது. அது உண்மைக்கு சான்று பகரும் அன்பெனும் அதிகாரம் என உரைத்த திருத்தந்தை, இயேசு உருவாக்க விரும்பும் அன்பு, நீதி, மற்றும், அமைதியின் அரசே, உலகு முடிவுவரை நிலைத்திருக்க வல்லது என்றும், இந்த அரசுக்கு இயேசுவே மன்னர் என்றும் கூறினார்.

அமைதி, சுதந்திரம், மற்றும் வாழ்வின் முழுமையை விரும்பும் ஒவ்வொருவரும், தங்கள் இதயத்தில், இயேசுவை, அரசராக அமர வைப்பதன் வழியாக, அமைதி, நீதி, மற்றும் முழுமையை உலகில் நிலை நாட்ட உதவ முடியும் என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இதற்காக நாம் இயேசுவை அரசராக நம் இதயத்திற்குள் வரவேற்போம் எனவும் எடுத்துரைத்தார். ●

ஆசிரியர் பேனா...

# இறைமுகம் காண வாய்ப்பு தேடும் திருவருகைக் காலம்

தமிழ் கலாச்சாரத்தில் திருமண விழாக்களின்போது பெண் அழைத்தல் நிகழ்வு மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. பலநூறு ஆண்டுகளாக இருந்துவரும் இந்நிகழ்வில் “மணமகளே, மருமகளே, வா! வா!” என்னும் திரைத்துறைப் பாடல் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் தானாகவே வந்து ஒட்டிக் கொண்டு நிரந்தர இடம் பிடித்திருக்கிறது. இன்றும் இப்பாடல் திருமண வீடுகளில் ஒலிபரப்பப்படும் போது அந்த பகுதி மக்கள் அனைவரும் மணமகளின் அழைப்பு இடம் பெறுவதை புரிந்து கொள்வார்கள்.

**ஆன்மீகத் தேடல்:** திருவழிபாட்டு ஆண்டின் தொடக்க பருவம் “திருவருகைக்காலம்”. கிறிஸ்து பிறப்புக்கு முன் நான்கு ஞாயிறுகள் நீடிக்கும் இக்காலம், கிறிஸ்தவ மக்கள் மத்தியில் மட்டுமல்லாமல் அனைத்து தரப்பினருக்கும் பல அடையாளங்கள்- திருவழிபாட்டு கொண்டாட்டங்களில் சில சிறப்புகள் - ஸ்டார், மெழுகுதிரிகள், ஊதாநிற திருவழிபாட்டு உடைகள், குடில்கள் - இப்பருவத்தின் சிறப்பினை உணர்த்து கின்றன. இதனால் வர இருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டத்தினைச் சிறப்பிக்க மக்கள் தயார் ஆகிறார்கள். பொருளாதார, சமூக, ஆடம்பர தயாரிப்பு களை விட, ஆன்மீக அருள்வரம் தேடலில் நாம் தயாராக வேண்டும். அந்த தயாரிப்பில் இயேசுவின் இயல்புகளை நாம் பெற்றுக் கொள்ள முயற்சித்தல் வேண்டும். இன்னொரு விதத்தில் நம்மைத் தேடி வரும் இறைமுகம் காண தேடும் காலமாக இந்நாட்கள் அமைய வேண்டும்.

**ஆவலுடன் எதிர்பார்ப்போம்:** திருவருகைக் காலத்தை ஆங்கிலத்தில் ADVENT (அட்வன்ட்) என்று குறிப்பிடு கிறார்கள். அட்வென்ட் என்பது ஒருவிதமான படபடப்பு மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருத்தல் என்று அர்த்தப் படுத்தப்படுகிறது. ஒரு இல்லத்தில் குழந்தை பிறப்பு இத்தகைய உணர்வுடன் எதிர்பார்க்கப்படுகிறது. குழந்தை பிறந்ததும் ஒவ்வொருவரும் ஒருவாறு சொல்லி மகிழ்கிறார்கள். அதில் சிறப்பானது, குழந்தையின் முகம், தாயைக் குறித்து அல்லது தந்தையைக் குறித்து, உன் முகம் போலவே இருக்கிறது என்று சொல்லி மகிழ்வார்கள். இந்த தனது மறு முகத்தை, மறு ஜீவியை, தன்னிலிருந்து உதித்த ஒரு மகவை அதன் பெற்றோர் எத்துணை மகிழ்வுடன் அனுபவிக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். இத்தகைய உணர்வுடன் இன்றும் நாம் இயேசுவைத் தேட வேண்டும். ஆலய அலங்காரம், புத்தாடைகள், குடில் அமைப்புகள் - போன்றவற்றால் இதை நாம் உணர்த்துகிறோம் என்றாலும், இதில் நமது பெருமை, புகழ், பெயர், ஆகியவற்றை ஒட்டிப் பார்க் கிறோம். உதாரணமாக, புயல், நிலநடுக்கத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவிகள் அளிக்கும் போது, அப்பொருட்களின் மேல் கொடுப்பவரின் புகைப்படம், பெயர் ஆகியனவற்றை ஸ்டிக்கரில் ஒட்டிக் கொடுப்பது போல. இது தவிர்க்கப்பட வேண்டும். இதற்கு மாற்றாக - “சின்னஞ் சிறிய என் சகோதர சகோதரிகளுக்கு இவற்றைச் செய்த பொழுதெல்லாம், எனக்கே செய்தீர்கள்” என்ற இயேசுவின் வார்த்தைகளை மனதில் கொண்டு, ஏழையர், புறக்கணிக்கபட்ட வர்கள், தேவையில் இருப்பவர்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும். இவர்களின் மகிழ்ச்சியில் இறைமுகம் காண நாம் முயற்சிகளை முன்னெடுக்க இத்திருவருகைக் காலம் வாய்ப்பு அளிக்கிறது.



**மீண்டும் அவர் நம்மைத் தேடி வருவார்:** “You have made us for yourself, O Lord, and Our hearts are restless until they rest in you” - “ஆண்டவரே, எங்களை நீர் உமக்காகப் படைத்தீர். உம்மில் இளைப்பாறும் வரை, எங்களது இதயங்கள் ஓய்வின்றி தவிக்கின்றன” (Confessions, St.Augustine) என்று புனித அகுஸ்தீன் கூறுவார். ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு வகையில் இறைவனைத் தேடிக் கொண்டுதான் இருக்கிறான். கிறிஸ்தவர்களாகிய நம்மைப் பொறுத்தவரையில், இறைவன் நம்மைத் தேடி வந்தார். அவர் முடிவின் நாட்களில் மீண்டும் நம்மைத் தேடி வருவார். அதுவரையில் நாம் அவரைத் தேடிக் கொண்டிருக்க வேண்டும்.கிறிஸ்தவ அறநெறி வாழ்வு, கிறிஸ்துவை பிரதிபலிக்கச் சொல்கிறது, கிறிஸ்துவாக மாறச் சொல்கிறது, கிறிஸ்துவை தன்வயப்படுத்தச் சொல்கிறது. இதன் மூலம் காணக்கிடைக்கும் கிறிஸ்துவின் முகமாக நம்மை உலகம் பார்க்கிறது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 19-03-2013 புனித யோசேப்பு பெருவிழா நாளில் தமது இராயத்துவ தலைமைப் பொறுப்பேற்றார். அவரது தலைமை உரையைக் கேட்டுக் கொண்டிருந்த பிரேசில் நாட்டு கர்தினால் அவர்கள், தமக்கு அருகே அமர்ந்திருந்த அமெரிக்க - நியூயார்க் கர்தினால் மேதகு திமோத்தி டோலன் அவர்களைப் பார்த்து மகிழ்ச்சி கலந்த கண்ணீருடன், “திமோத்தி, நமது திருத்தந்தை இயேசுவைப் போல பேசுகிறார்” என்று கூறினார். அதற்கு மேதகு கர்தினால் திருமோத்தி அவர்கள் “அவர் எப்பொழுதும் கிறிஸ்துவை பிரதிபலித்துக் கொண்டிருந் தவர். இயேசுவைப் போலவே எளிமையானவர், இதுதான் திருத்தந்தை பிரான்சிஸ்” என்று கூறினார்.

திருத்தூதர் தூய பேதுரு மறைப்பணி காலம் தொட்டு, இந்த “திருவருகை” பின்பற்றப்பட்டது. இன்னும் சிலர் 480 ஆம் ஆண்டிலிருந்து வழக்கிலிருக்கிறது என்பர். திருச்சபை யின் பழம்பெரும் திருவழிபாட்டு முறையில் ஒன்றான இந்த திருவருகைக்காலம் மகிழ்ச்சியும் எதிர்பார்ப்பும் நிறைந்த காலம். இயேசு மனுவுடலேற்ற பொழுதும், பிறந்த பொழுதும், மக்களோடு மக்களாக வாழ்ந்த போதும் தந்தை கடவுளின் விருப்பத்தை நிறைவேற்றி, கடவுளின் அன்பின் முகமாகத் திகழ்ந்தார். அவரது அர்ப்பணம், எளிமை, எவரும் அணுகும் சூழல், அன்பு, தியாகம், கீழ்ப்படிதல் ஆகியனவற்றைப் பின்பற்றி, அறப்பணிகளில் கிறிஸ்தவ மதிப்பீட்டு செயலாக்கங்களில் நாம் அவரது திருமுகத்தைத் தேட வேண்டும், அவரது அன்புமுகமாக நாம் மாற வேண்டும். இறைவனின் திருமுகம் காண வாய்ப்பு தரும் இப்புனித அருள்தரும் காலத்தை மனநிறை வோடு நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ●

வாரச் சிந்தனை

திருவருகைக்காலம் 2-ஆம் ஞாயிறு (9-12-2018) பாரூக்.5:1-9 பிலிப்.1:4-6,8-11 லூக் 3:1-6

# “மனம் மாறுவோம் புதுப்படைப்பாவோம்”



அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.

ஒரு முனிவரைப் பார்த்து ஒருவர், “மனிதர் அனைவரும் பாவம் செய்கின்றனர். நீதிமான்கள் கூட ஒரு நாளுக்கு ஒருமுறை தவறுகிறான் என்று விவிலியம் கூறுகிறது. அப்படியென்றால் ஒரு பாவிக்கும், புனித பாதையில் நடக்கும் ஒரு மனிதனுக்கும் உள்ள வேறுபாட்டை எப்படி தெரிந்து கொள்வது?” என்று கேட்டார். முனிவர், “மிகவும் எளிது! இருவருக்கும் இடையே உள்ள வேறுபாடு ஒரு பன்றிக்கும், ஆட்டுக்கும் உள்ள வேறுபாடு” என்றார். “நீங்கள் சொல்வது புரியவில்லையே! ஏன் பன்றியைப் பற்றியெல்லாம் பேசி அசிங்கப்படுத்துகிறீர்கள்?” என்று கேட்டார் அந்த நபர். முனிவர் அம்மனிதனிடம், “ஓர் ஆடும் பன்றியும் சேற்றில் விழுவதாக வைத்துக் கொள்வோம். விழுந்தவுடன் ஆடு தன் மேய்ப்பனை நோக்கி கதறும். வெளியே வர முயற்சி செய்யும். ஆனால் பன்றியோ, சேற்றிலேயே தொடர்ந்து புரண்டு இன்பம் காணும். அதே போல பாவச் சேற்றில் ஒரு நல்ல மனிதன் விழுந்தால் கடவுளை நோக்கி கதறி அழுது, மனமாறி, அதிலிருந்து வெளியே வந்து புது வாழ்வு வாழ முயற்சி செய்வான். ஆனால் பாவியோ தொடர்ந்து பாவத்திலேயே கிடந்து அதில் இன்பம் காண்பான்” என்றார் முனிவர்.

**மனமாற்றம்:** மனமாற்றம் என்பது ஒரு பயணம்; இருளிலிருந்து ஒளியை நோக்கிய, பாவத்திலிருந்து புனிதத்தை நோக்கிய, சாவிலிருந்து வாழ்வை நோக்கிய, வெறுப்பிலிருந்து அன்பை நோக்கிய பயணம். அடிப்படையில் பார்த்தோம் என்றால், மனமாற்றம் என்பது நம்மை பீடித்திருக்கும் அல்லது நாம் உழன்று கொண்டிருக்கும் தீமையிலிருந்து வெளியே வருவது. மனமாற்றம் தன்னில் இரண்டு காரியங்களை உள்ளடக்கியது. முதலாவதாக, தான் செய்த குற்றங்களை நினைத்து வருத்தப்படுவது. இரண்டாவதாக, தன்னுடைய குற்றங்களை நியாயப்படுத்தாமல் அவற்றை ஏற்றுக்கொள்வது. இவ்வாறு நாம் செய்த பாவங்களை ஏற்றுக் கொள்ளாமல் மற்ற நபர்கள் மீதும், சூழ்நிலையின் மீதும் பழியைப் போடாமல், மனம் மாறி புதுப்படைப்பாக மாற முயற்சி செய்வோம். இவ்வாறு செய்யாவிட்டால் மனமாற்றம் என்பது எட்டாக் கனியாகவே இருக்கும்.

**பழைய ஏற்பாட்டில்...:** மனமாற்றம் என்பது ஏதோ இன்று ஏற்பட்டது அல்ல. விவிலியத்தில் பழைய ஏற்பாட்டில் பார்க்கிறோம். இஸ்ராயேல் மக்கள் கடவுளை மறந்து பாவ வாழ்க்கை வாழ்ந்த போது, கடவுள் பல்வேறு இறைவாக்கினர்களை அனுப்பி அவர்களை மனம் மாற அழைப்பு விடுத்தார்.

✷ எசே.18:21, “தீயவர் தாம் செய்த பாவங்களை விட்டு மனம் மாறி நீதியை நேர்மையை கடைபிடித்தால் அவர்கள் வாழ்வது உறுதி” என்கிறார்.

✷ சீராக்.4:26, “உன் பாவங்களை அறிக்கையிட நீ வெட்கப்படாதே” என்கிறார்.

✷ இறைவாக்கினர் நாத்தான் தாவீதின் பாவத்தை சுட்டிக்காட்டும் போது, திபா.51:3, “இறைவா நான் உமக்கு எதிராக பாவம் செய்தேன்” என்கிறார் தாவீது.

✷ இன்றைய முதல் வாசகத்தில் வாசிக்கக் கேட்டோம், “எருசலேமே, உன் துன்ப துயரத்தின் ஆடைகளைக் களைந்து விடு; கடவுள் உனக்கு அருளும் மாட்சியின் பேரழகை என்றென்றும் ஆடையாக அணிந்துகொள்” (பாரூக்.5:1,2).

**நற்செய்தியில்...** இன்றைய நற்செய்தியின் தொடக்கத்தில் ஒரு சில நபர்களைக் குறிப்பிட்ட பிறகு, புனித திருமுழுக்கு யோவான் வந்தார், ’மனம் மாறுங்கள், திருமுழுக்கு பெறுங்கள்’ என்று கூறியதாக புனித லூக்கா இன்றைய நற்செய்தியில் குறிப்பிடுகிறார். முதல் நபர் திபேரியு சீசர், இவர் கலிலேயா கடலோரத்தில் உள்ள ஒரு கல்லறை மேல் தன்னுடைய சுய நலனுக்காக அவர் பெயரால் ஒரு நகரத்தையே கட்டினார். இவ்வாறு யூதர்களுக்கு விரும்பாத பல செயல்களைச் செய்தார். இரண்டாவது நபர் போந்தியு பிலாத்து, இவர் எருசலேம் கோவில் கருவூலத்தை தேவையில்லாத பல்வேறு காரியங்களுக்காக பயன்படுத்தியவர். இயேசுவுக்கு மரண தண்டனை கொடுத்தவன். மூன்றாவது நபர் ஏரோது மன்னன். இவன் தான் திருமுழுக்கு யோவானின் தலையை வெட்டச் சொல்லி ஆணை பிறப்பித்தவன். நான்காவது நபர் அன்னா, ஒரு நேரத்தில் ஒரு தலைமை குருதான் இருக்க முடியும். ஆனால் கயபா ஏற்கனவே தலைமை குருவாய் இருக்க அவரது மாமனார் அன்னா நானும் தலைமை குருவாக இருப்பேன் என்று ‘நான்’, ‘பதவி’ என்று பேராசை கொண்டவனாக குறிப்பிடப்படுகிறார். இவ்வாறு இந்த நபர்களை வரலாற்றுப் பாதையில் தந்து, இவர்கள் தங்கள் வாழ்க்கையில் மனம் மாறாதவர்கள். அநீதி, பதவி மோகம், பேராசை கொண்டு வாழ்ந்தவர்கள். எனவே, நீங்கள் இவர்களைப் போல் இருக்க வேண்டாம், “நீங்கள் மனம் மாறுங்கள், திருமுழுக்கு பெறுங்கள்” என்று புனித திருமுழுக்கு யோவான் நமக்கு அழைப்பு விடுப்பதாக, புனித லூக்கா இன்றைய நற்செய்தியில் படம் பிடித்து காட்டுகின்றார்.

**திருமுழுக்கு யோவானின் கனவு:** புனித திருமுழுக்கு யோவானுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. இன்றைய நற்செய்தியிலும் அவர் இயேசுவின் வருகையை முன்னறிவிக்கிறார். பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் பாலம் போல அமைந்தவர். இவரின் வாழ்க்கை பாணியே தனி. இவர் குருக்கள் குலத்தைச் சார்ந்தவர். இவருடைய தந்தை செக்கரியா எருசலேம் கோவிலில் திருப்பணி ஆற்றினாலும் (லூக்.1:8), இவர் யோர்தான் நதியில் இறங்கி மக்கள் திருமுழுக்கு பெற வேண்டியும், தங்கள் பாவங்களிலிருந்து விடுதலை பெறவேண்டியும் கோரினார். மக்களின் சீர்குலைந்த பாதச் சுவடுகளை செம்மைப்படுத்தி அவர்களின் மனங்களை மாற்றி அமைத்து, இயேசுவின் வருகையை முன்னறிவிக்கிறார் புனித திருமுழுக்கு யோவான். பாவச் சூழலில் இருக்கும் இதயத்தை, புதிய பாதைக்கு திருப்புவதே மனம் திரும்புவதாகும். இங்கு நாம் செம்மைப் படுத்த வேண்டியது கரடுமுரடான இடத்தையோ மேடு பள்ளங்களையோ அல்ல. மாறாக நமது உள்ளங்களையே! நமது இதயத்தில் நிரப்பப்பட வேண்டியவைகள் அன்பு, அமைதி, மகிழ்வு. அகற்றப்பட வேண்டியவை சுயநலம், பொறாமை, வைராக்கியம் போன்றவைகளே. இவ்வாறு கரடு முரடானப் பாதையை நேரியப் பாதையாகவும், கோணலான சிந்தனையையும், குறுக்குப் பாதையையும் அகற்றி புதிய பாதை அமைப்பதே புனித திருமுழுக்கு யோவானின் கனவு.

**புதிய படைப்பாவோம்:** இன்றைய நற்செய்தியில் புனித திருமுழுக்கு யோவான் ’மனம் மாறுங்கள்’ என்று கூறுவதோடு நின்றுவிடாமல் ’திருமுழுக்கு பெறுங்கள்’ என்றும் பறைசாற்றுகின்றார். ’மனம் மாறுங்கள்’ என்று பழைய பாவ வாழ்வை கலைந்து விடுவது. ’ திருமுழுக்கு பெறுங்கள்’ என்பது புதிய வாழ்வை பெற்றுக் கொள்வது, புதிய படைப்பாக மாறுவது. எனவே நாம் மனம் மாறி பாவ வாழ்க்கையை விட்டுவிட்டு வாழ்கின்றபோது புதிய படைப்பாக மாறுகின்றோம். ஆகவே நாம் புதுப்படைப்பாக மாற புதுவாழ்வு பெற நம் உள்ளத்தை கடவுளுக்கு திறந்து கொடுத்தாகத்தான் வேண்டும். ஏமாற்றி வாங்கியதில் நான்கு மடங்காக திருப்பிக் கொடுக்க முன் வந்து மனம் மாறிய சக்கேயுவைப்போல (லூக்.19:1-10), தனது வாழ்வை செம்மைப்படுத்தி பிறரையும் இயேசுவிடம் அழைத்து வந்த சமாரியப் பெண்ணைப் போல (யோவா 4:25-40), நாமும் மனமாறி வாழ நாம் ஒரு அடி எடுத்து வைத்தால் இறைவன் நமக்காக நூறு அடி எடுத்து வைப்பார் என்பதை இத்திரு வருகைக் காலத்தில் உணருவோம். நடந்த பாதைகள் தடுமாறினாலும், நடக்கும் பாதங்கள் தளர்ந்தாலும், மனம் தடுமாறாமல் இருக்க தடையாக உள்ள அனைத்தையும் அப்புறப்படுத்தி செப்பனிட்ட புதிய பாதை அமைக்க முயற்சி செய்வோம், புதுப்படைப்பாக மாறுவோம்.●

மிக அருமையாக புரிதல் உள்ளவன் தான் எவ்வளவு குறைவாக அறிந்துள்ளான் என்பதை அறிவான். - தாமஸ் ஜெபர்சன்.



# இயேசுவின் கேள்விக்கென்ன பதில்? 3

Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

1.“**நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருந்த வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?** (லூாக் 2:49).

இது இயேசுவின் முதல் கேள்வி. தன் தாயிடமும் வளர்ப்புத் தந்தையிடமும் கேட்கிறார். இந்தக் கேள்வியை நம்மிடம் கேட்டால் என்ன பதில் சொல்வோம். நாமும் கடவுளைத் தேடுகிறோம். அவர் கிடைப்பதில்லை, மேலும் பதில் எதுவும் சொல்வதில்லை.

மரியன்னையும் யோசேப்பும் ஆலயத்துக்குச் சென்று இயேசுவைத் தேடினார்கள். நாம் எங்கு சென்று கடவுளைத் தேடுகிறோம்? நாம் தேடுவதில்லை. கடவுள் அங்கு இருக்கிறார் என்று நமக்குத்தான் தெரியுமே. எனவே நேரே அவரிடம் வேண்டியதைக் கேட்கிறோம். அவ்வளவு நம்பிக்கை நமக்கு!

நாம் தேடாதபோது நம்மைப் பார்த்து இயேசு “ஏன் என்னைத் தேடுகிறீர்கள்” என்று கேட்கப் போவதில்லை. ஒரு சிலர் அவரைத் தேடி வருகின்றனர். காணாமல் போன ஒருவரைத் தேடுவது வேறு, உதவி பெறுவதற்காகத் தேடி வருவது வேறு. அவர்களுக்கும் இயேசு அதே கேள்வியைக் கேட்கலாம். அப்போது இயேசுவின் கேள்வியையே பதிலாக ஏற்றுக்கொள்ளலாமா? “ஏன் என்னைத் தேடினீர்கள்?”

அவர் தம் தந்தையின் அலுவலில் ஈடுபட்டிருக்கிறார். அந்த நேரத்தில் நமது தேவையை அவரிடம் கூறலாமா? நமது தேடலின் காரணம் மிக அற்பமானதாக இருக்கலாம். தந்தை உலகில் ஆற்ற வேண்டிய அலுவல் ஏராளம். அவ்வாறு இருக்க நமது மிகச் சிறிய தேவைகளுக்காகக் கடவுளைத் தேடும்போது இந்தக் கேள்வியை நம்மிடம் கேட்கலாம் அல்லவா?

தந்தையின் அலுவலின் பட்டியலில் நம் தேவைகளும் இடம் பெறாதா? நிச்சயமாக இடம் பெறும். அவற்றை நிறைவேற்ற வேண்டிய நேரத்தில், நிறைவேற்ற வேண்டிய முறையில் அவர் கட்டாயம் நிறைவேற்றுவார். நாம் எதிர்பாராத விதத்தில் நிறைவேற்றுவார். நாம் கேட்கத் தயங்கும் கொடைகளையும் நமக்கு வழங்குவார். வியக்கத் தக்க விதத்தில் நிறைவேற்றுவார்.

உதாரணமாக திருப்பாடலில் ஒரு வசனத்தை வாசிக்கிறோம்: “கழுகு தன் குஞ்சை இறக்கையின் மீது அமர்த்திப் பறப்பதுபோல...” அதாவது தன் குஞ்சுக்குத் தீங்கு விளைக்கக் கூடிய எந்த எதிரிக்கும் எட்டாதபடி கழுகு மிக உயரத்தில் பறந்துவிடுகிறது. என்ன அருமையான உதாரணம்! அப்படி நம்முடைய எல்லா எதிரிகள் கைகளுக்கும் எட்டாத இடத்தில் கடவுள் நம்மை உயர்த்தி வைப்பார். உயிர்களைக் காப்பதும் தந்தையின் அலுவல்.

இயேசு விண்ணுலகைவிட்டு மண்ணுலகுக்கு வந்து விட்டாலும் தந்தையின் அலுவலில் இருந்து விலகிவிடவில்லை. இதை நாம் அறிந்திருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அதைத் தவிர மற்ற வேலைகள் அவருடைய பணிகள் அல்ல. பின்னர் அவர் போதிக்கத் தொடங்கியபோது ஒருவர் தன் சகோதரனோடு பாகம் பிரித்துத் தருமாறு இயேசுவிடம் கேட்கிறார். அதற்கு இயேசு “என்னை உங்களுக்கு நடுவராகவோ பாகம் பிரிப்பவராகவோ அமர்த்தியவர் யார்?” (லூாக் 12:14) என்றார். இது இயேசுவைப் பொருத்தமட்டில் கடவுளுடைய கவனத்தை ஈர்க்கத் தகுதியற்ற ஒன்று.

**2. இ**யேசு திரும்பிப் பார்த்து, அவர்கள் தம்மைப் பின் தொடர்வதைக் கண்டு **“என்ன தேடுகிறீர்கள்?”** என்று அவர்களிடம் கேட்டார். (யோவா 1:38)

இது இயேசுவின் இரண்டாவது கேள்வி. சிலர் தன்னைப் பின்தொடர்வதைப் பார்த்து இயேசு உடனே பெருமைப் பட்டுவிடவில்லை. என்ன தேடுகிறீர்கள்?

கடவுள் என்ற முறையில் அவர்களுடைய எண்ணம் புரியாமலா இருக்கும்? ஆனாலும் ஒருவர் தன் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறார். அப்படி வெளியிடும்போது அது உறுதிபடுகிறது, அல்லது உடைபடுகிறது. சிலர் இயேசுவைப் பின்பற்றத் தங்கள் விருப்பத்தை வெளிப்படையாகத் தெரிவித்தனர், ஆனால் இயேசு தன்னுடைய நிபந்தனையை அவர்கள் முன் வைத்த உடன் அவர்கள் பின்வாங்கினர்.

இங்கு இயேசு “என்ன தேடுகிறீர்கள்?” என்று கேட்கிறார். அவர்கள் “ரபி, எங்கே தங்கியிருக்கிறீர்? என்று வேறு ஒரு கேள்வியாலேயே பதிலளித்தனர். இயேசு அவர்களிடம் **“வந்து பாருங்கள்”** என்று அழைப்பு விடுத்தார். எங்கு தங்கியிருப்பார்? அவருக்குத்தான் தலைசாய்க்கவே இடமில்லையே. அந்த வெறுமையைப் பார்க்க அழைத்தாரா?

இன்று இதே வார்த்தைகளைக் கூறி இறை பணிக்கு இளஞர்களையும் இளம்பெண்களையும் அழைக்கிறோம். என்ன ஆபத்தான அழைப்பு! வந்து எதைப் பார்க்கப் போகிறார்கள்? இயேசுவின் போதனைகளில் இருந்து திசை மாறிய நம் வாழ்வையா? பண ஆசையிலும் பதவிக்கான போட்டியிலும் வாழும் ஒரு நிலையையா? அல்லது சொல்லும் செயலும் ஒருங்கிணைந்த சீரிய வாழ்வையா? பணபலமும் பொருளாசையும் ஆதிக்கம் செய்யாத ஒரு சுதந்திரமான புதிய உலகையா? இருந்தாலும் இயேசுவின் வார்த்தைகளைக் கடன் வாங்கி “வந்து பாருங்கள்” என்று அழைக்க நமக்கு மிகுந்த துணிவு வேண்டும்.

அவர்களும் சென்று அவர் தங்கியிருந்த இடத்தைப் பார்த்தார்கள். அப்போது ஏறக்குறைய மாலை நான்கு மணி. இதை யோவான் குறிப்பிடுகிறார். அவர்களுக்கு அழைத்தல் பெற்ற நேரம் அவ்வளவு முக்கியமானது. ஏனெனில் அன்றே அவர்கள் அவரைப் பின்தொடர முடிவு எடுத்துவிட்டனர். **பார்த்த முதல் நாளே** பாதை மாறிவிட்டது. அந்த அளவு இயேசுவின் சந்திப்பு அவர்கள் மீது தாக்கம் செலுத்தியது. ஏனெனில் அவரைச் சந்தித்த எவரும் பாதை மாறாமல் சென்ற வழியிலேயே திரும்பிச் செல்ல முடியாது.

அந்தச் சீடரைப் போல ஈராயிரம் ஆண்டுகள் கடந்தும் பலர் பல நூற்றாண்டுகளில் கடவுளைத் தேடுகின்றனர். தேடும் ஒவ்வொருவருக்கும் பல்வேறுபட்ட அனுபவங்கள். சிலர் பல ஆண்டுகளாக தேடியும் அவர் கிடைப்பதில்லை. வேறு சிலரை அவரே வலியச் சென்று தடுத்தாட்கொள்கிறார். சிலர் சிறிது சிறிதாகக் கடவுளை அறிந்துகொள்கின்றனர். வேறு சிலர் சின்னப்பரைப் போன்று ஒரு திடீர் தாக்குதலால் எடுத்த உடனேயே ஒளிவெள்ளத்தால் மூழ்க்கடிக்கப்பட்டு இறைவனைச் சந்திக்கின்றனர். முற்றிலுமாக மாறிவிடுகின்றனர். ஏன் இப்படி? ஒரு வேளை யாரும் தன் சொந்த முயற்சியால் கடவுளைக் கண்டேன் என்று கூறாதிருக்க. - தொடரும்




திரு.L.அந்தோணிசாமி
M.A.,M.A.,M.Ed.,M.Phil.,
தலைமை ஆசிரியர்
R.C.நடுநிலைப்பள்ளி, மணலப்பாடி.

மலர்ந்தது: 07-06-1962
உதிர்ந்தது: 08-12-2013

## விண்ணக வாழ்வின் 5-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

*இரக்கத்தின் இறைவா! நிலையான பேரின்பத்தின் தூய ஒளியே, கருணையின் உருவே, உம்மால் அழைக்கப்பட்டவரும் என்றும் மறக்க முடியாதபடி எங்கள் மனதில் நிலைத்து வாழும் எங்கள் குடும்பத் தலைவர் உம் இறையரசில் ஒளிர செபிக்கிறோம்.*

**மறந்தால் தானே நினைக்க, என்றும் எங்கள் நினைவில் நீங்காது வாழ்ந்து வரும் அன்பு இதய தெய்வத்திற்கு**

**உம் நினைவில் வாழும் மனைவி**
**ம. அகநெல்லி நேவிஸ் மேரி**
**மகன்: அ. அப்தி ஜோஷ்வா**
**மருமகள்: செல்வா வின்சி**
**C. சைமன் - R. லூர்துமரி**

மணலப்பாடி. சகாய மாதா ஆலயத்தில் 8-12-2018 காலை 11.00 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படும்.



# நீ, நீயாக இரு

– சுவாமி ஆ. லூயிஸ்.

கலப்படம் இல்லாத கலந்துரையாடல் இல்லை. கலவை இல்லாத பொருள் இல்லை. இப்படிப்பட்ட நிலையில் நீ, நீயாக இரு என்று சொல்வது எவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்ற சவாலை எதிர்கொண்டு நீச்சல் போடுவதுதான் தர்மமாகும். கடவுளுடைய படைப்பில் ஒவ்வொன்றும் தம்மைப் போலவே தனித் தன்மை வாய்ந்தது என்பதை உணர்வது மிகவும் பயன்மிக்கது. படைப்பின் அதிசயமே நமது இதயங்களை நிரப்பினால் என்றும் மகிழ்வோடு நல்ல மனநிலையோடு, உடல் நலனோடு வாழ வைக்கும். இவ்வாறு ஒவ்வொரு வரும் தனித்தன்மையோடும் பொதுத் தன்மையோடும் வாழ, உணர ஆரம்பித்து விட்டால் உலகிலும், சமயங்களிலும் சமாதானம் கொடி கட்டி பறக்கும்.

**நீயே முழுமை:** முழுமையும் நன்மைத் தனமான இறைவன் படைப்பதெல்லாம் நன்மையாகவே விளங்கும், நம்முடைய ஒத்துழைப்பு முழுமையாக இருந்தால் எத்தகையத் தீங்கும் நம்மைத் தொடர்ந்து வர இயலாது. தந்தை மகன் ஆவி என்ற மூவொரு கடவுள் சத்சித் ஆனந்தமாக நம் ஒவ்வொருவரிலும் அனைவரிலும் நிறைவாக இருக்கின்றார், படைப்பையும் நிறைவாக வழங்கி முழு நலனுடன் வாழ வைத்துக் கொண்டு வருகிறார்.

கடவுள் அருளும் சுதந்திரம் தான் ஒவ்வொருவருக்கும் ஓர் ஆசீராகவும், சவாலாகவும் இருந்து வருகிறது. அவர் அருளும் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தும்போது போராட்டம் இடம் பெறுகிறது, அவரோடு உடன்பட்டு வாழும் போது அமைதி ஆட்சி செய்கிறது. கடவுளோ வேறு யாரும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தக் கூடாது, முடியாது. ஒருவர் அல்லது ஒரு குழுவானது தானாக உணர்ந்து கடவுளின் திருவுளத்திற்கு உடன்படும்போது சுதந்திரம் வெற்றி பெறுகின்றது, இல்லையேல் கடுநிலை இடம் பெறுகிறது. “உமது திருவுளம் நிறைவேறுக” என்பது வாழ்வு, வழி, விடுதலை ஆகும். இத்தகைய ஞானத்தை மனிதம் முழுவதும் பெறுவதாக!

**சோதனைமேல் சோதனை:** சோதனை இல்லாத வாழ்வு இல்லை. சாதனை, தோல்வி இல்லாத காலமும் இல்லை. வாழ்வை ஒருவர் சரியாக, முழுமையாக புரிந்து உணர, வாழ ஆரம்பித்துவிட்டால் வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தாரகை மந்திரம் நமக்குச் சொந்தமாகும், இல்லையேல் ஏன் பிறந்தோம் என்ற மன அழுத்தத்தில் வாழ்வு சுமையாகும், சாவில் முடிவு பெறும்.

சோறு, சொத்து, சுயவழிபாடு என்ற மூவித சோதனை களை இயேசு அலகையிடமிருந்து ஆரம்பத்தில் சந்தித்தார். இயேசு வென்றார், அலகை தோற்றது. நமது வாழ்வில் அத்தகைய நிலையை அடைய போராட வேண்டி உள்ளது, வெற்றியும் தோல்வியும் நம்மைத் தொடர்கிறது. கடவுளின் கருணையால் கரை சேர்வோம் என்று நம்பி நாளும் பயணத்தை மேற்கொள்வோம். அவரோடு நாமிருக்க யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை. துணிவுடன் வாழ்வை சந்திப்போம், அவர் அருளால் நிலை வாழ்வை நமதாக்கிக் கொள்வோம். சாதனை படைக்க சாதனத்தைத் தேடுவோம்.

**தின சாதனம்:** முயற்சியே வெற்றியை வழங்கும். இவண் புதுமைகளை மட்டும் எதிர்பார்க்காமல், நமது சிறு முயற்சிகளும் நிச்சயம் தேவை என்பதை உணர்ந்து, கடவுள் மீது சுமையை சுமத்திவிடாமல், நாமதான் நம்மை மறுத்து, நமது சிலுவையைச் சுமந்து கொண்டு அவரைப் பின்தொடர்வது வாழ்வின் நெறியாகும்.

நாம் இருக்கும் போதே, நம்மை இழப்பது எப்படி என்ற கலையை காலை, நண்பகல், மாலை போன்ற சௌகரிய மான நேரத்தில் தனியாக, குடும்பமாக, குழுவாக தியானப் பயிற்சியை இடைவிடாமல் தொடர்வது மிகவும் முக்கியம். நேரமில்லை என்று அர்த்தமில்லாத சாக்கு போக்குகளைக் காட்டி நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். தியானத்தில் நமது வெளிப்புலன்கள், உட்புலன்களை அமைதிபடுத்தி, ஆன்மா மீது கவனம் செலுத்தி, ஆன்மாவிற்குள் இருக்கும் தூய ஆவியின் மீது கவனம் செலுத்தினால் நமது வாழ்வு நிலை வாழ்வாகும். இத்தகைய வாழ்வுக்கு சாவு என்பதில்லை, உடல்தான் நம்மை விட்டுப்பிரியும், இது இயற்கையின் நியதி.

**அவரின் சாயல்:** கடவுளின் சாயலாக நாம் ஒவ்வொருவரும் படைக்கப்பட்டு வருகிறோம் என்பதின் பொருளைப் புரிந்து வாழ்வோம். கடவுள் தன்னிடமிருக்கும் மகனையும், ஆவியையும் நமக்குள் வைத்து, அவரது சாயலை நம்மீது பதிய வைக்கிறார். அவரின் சாயலைப் பெற நம்மை இறைவார்த்தையாலும், ஆவியின் அருளாலும் நம்மைத் தொடர்ந்து நிரப்புவது என்றால், உணர்வதாகும். கடவுள் ஒருவர்தான் மெய்மை, இம்மெய்மையை அனைத்திலும், அனைவரிலும் உணர்வதே நமது வாழ்வின் நோக்கமாகும்.

இறைவனின் சாயலை மனித குலம் தெளிவாகப் புரிந்து வாழ, கடவுள் தன் மகனையே ஆவியின் ஆற்றலால், மரியன்னை வழி நமக்கு வழங்கி வருகிறார். மனிதத் தன்மையையும் தெய்வத் தன்மையையும் முழுமையாக இயேசு சுவைத்து வாழ்ந்தது போல நாமும் வாழ அழைக்கப்படுகின்றோம். இந்த அழைப்பைத் தான் மனித குலம் வெவ்வேறு முறையில் கடைபிடித்து, இலக்கை நோக்கி பயணித்து வருகிறது. நமக்கு இயேசு வழிகாட்டியாகவும் எல்லாமுமாய் இருக்கிறார்.

இறைவனை நமது சாயலாக, இயேசுவை நமது உருவமாக, தூய ஆவியை நமது கோவிலாக உணர்ந்து, நம்பி நாளும் வாழ முயலும் போது, கடவுள் நம்மைக் கைவிடமாட்டார். அவரின் அன்புப் பிள்ளைகளாய் வாழ வழி உண்டு, வழிகாட்டி உண்டு. வழிபாடு உண்டு, வாழ்வு உண்டு என்று உந்துதல் பெற்று உயர்வோம், அவரோடு ஒன்றாவோம், திருஅவையை முழுமையாக நம்புவோம். பலவீனம் உள்ள திருஅவையை நம்புவது மேலான காரியமாகும். திருஅவை வழியாகவே நாம் இயேசுவில் முழுமைப் பெற வழி உண்டு. இறைவனின் விருப்பப்படி அவரைப் போல வாழ்வோம் வாழ வைப்போம். ●

## பேராசிரியர் பா. வளன் அரசு அவர்களுக்கு முத்தமிழ்க் காவலர் விசுவநாதம் விருது

11-11-2018 ஞாயிறு மாலை 5 மணியளவில் சென்னை முத்தமிழ்க் காவலர் விசுவநாதம் அறக்கட்டளையின் சார்பில் பாம்குரோவ் உணவரங்கத்தில் நீதிபதி ஆர். இலட்சுமணன் தலைமையில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களின் நூற்று இருபதாவது பிறந்த நாள் பெருமங்கல நிகழ்ச்சி நடைபெற்றது. மணிமேகலை கண்ணன் வரவேற்றுப் பேசினார். பேராசிரியர் ஆறு அழகப்பன், பேராசிரியர் பா. வளன் அரசு, பாவலர் கலை வேந்தன் ஆகிய மூவருக்கும் முத் தமிழ்க் கழகத் துணைத் தலைவர் முனைவர் கிருட்டிண சந்து சோர்டியா வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியை பருவீன் சுல்தானா சிறப்புரை ஆற்றினார். வெற்றிச்செல்வி நன்றி கூறினார். நாட்டுப் பண்ணுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. பேராசிரியர் பா. வளன் அரசு பெறும் நூற்று நான்காவது விருது இது என்பது குறிப்பிடத்தக்கது.



## இயேசுவின் நற்செய்தி வாழ்வாக்க

### மீட்பரின் பிறப்பு

சகோ. அ. ஆரோக்கியதாஸ் - திண்டிவனம்.

**இயேசுவின் நற்செய்தி படிக்க, தியானிக்க, வாழ்வாக்க அறிவிக்க**

இயேசு ஆண்டவர் என வாயார அறிக்கையிட்டு, இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என உள்ளூர நம்பினால் மீட்புப் பெறுவீர்கள். உள்ளூர நம்புவோர் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவார். வாயார அறிக்கை யிடுவோர் மீட்புப் பெறுவர். உரோமை.10:9-10.

கிறிஸ்துவம் என்பது ஒரு மதம் அல்ல; அது ஒரு வாழ்க்கை நெறிமுறை. தூய வாழ்வு வாழ கொடுக்கப்படும் அறிவுரைகள். இந்த வாழ்க்கை நெறிமுறைகளை போதித்தவர் இயேசு. போதித்தது மட்டுமல்ல. சாதித்தும் வாழ்ந்தும் காட்டினார். மனித வாழ்வின் எந்த சூழலுக்கும் இயேசுவின் வார்த்தையும் வாழ்வும் நமக்கு பொருந்தி வரவே செய்கின்றது. ஆனால் அவற்றில் சிலவற்றை நம் மனம் ஏற்க மறுக்கிறது. ஏனெனில் அது ஒரு குறுகலான முட்களின் பாதை, ஒரு கசப்பான மருந்து என மனம் கருதுகிறது.

இயேசுவே சொல்கிறார். மத்.7:13,14 "இடுக்கமான வாயிலின் வழியே நுழையுங்கள், ஏனெனில் அழிவுக்குச் செல்லும் வாயில் அகன்றது. வழியும் விரிவானது. அதன் வழியே செல்வோர் பலர். வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது. வழியும் மிகக் குறுகலானது. இதைக் கண்டுபிடிப்போர் சிலரே.

நாம் வாழும் இந்த உலகத்தின் தோற்றம், அதில் வாழும் உயிரினங்களின் தோற்றம் அனைத்தும் பல நூறு கோடி ஆண்டுகளாக பரிணாம வளர்ச்சி அடைகிறது. தொடர்ந்து வளர்ந்து வருவதைப் பார்க்கிறோம். ஏற்றுக்கொள்கிறோம். மனித இனத்தின் வரலாறு எப்போது தொடங்கியது என்பது நமக்கு தெரியாது. ஆரம்பகால மனிதன் நாடோடியாகத் தான் வாழ்ந்தான், காடுகளில் வேட்டையாடி பச்சை மாமி சங்களையும் இயற்கையில் கிடைத்த கிழங்கு, காய் கனிகளையும் உண்டு வாழ்ந்தான். பாதுகாப்புக்கு மலைக் குகைகளில் வாழக் கற்றுக்கொண்டான். மொழி கிடையாது. எழுத்து வடிவம் இல்லை. நாகரிகம் வளர வளர ஆற்றுப் படுகைகளில் தங்கிப் பயிரிடவும், ஆடு மாடுகள் வளர்க்கவும், கற்றுக் கொண்டான்.

மனிதன் வாழ்ந்த இந்த உலக வரலாற்றை கி.மு., கி.பி. கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்கு பின், என இரு பெரும் பிரிவுகளாக பிரித்தார்கள். கிறிஸ்து பிறந்து தற்போது 2018 ஆண்டுகள் என்கிறோம். ஆனால் கிறிஸ்து பிறப்பிற்கு முன் இந்த கி.மு. என்று குறிப்பிடுகிற காலம் மனித இனம் தோன்றிய பிறகு மட்டுமல்ல. இந்த உலகமும் உயிரினங்களும் தோன்றிய கால முதல், அப்படியே மனித இனம் தோன்றி வாழ தொடங்கிய காலமுதல், ஆனால் இந்த மனித இனம் தோன்று வதற்கு பலகோடி ஆண்டுகளுக்கு முன்னால் டயனோசர், போன்ற வலிமை மிக்க பல உயிரினங்கள் தோன்றி மறைந்தன. அகழ்வாராய்ச்சிகள் நமக்கு ஆதாரமாக உள்ளன. அவ்விதமாகவே மனித இனம் தோன்றிய காலம் தெரியாது. மனித இனம் நாடோடி இனம் தான். மனிதனுக்கு பேசத் தெரியாது. மொழி, எழுத்து இல்லை. சைகை தான். பிறகு தான் சமயங்கள் தோன்றின. அவனுக்கு உதவியாக இருந்தவற்றை நினைத்து உள்ளத்தில் எழுந்த நன்றி உணர்வை வெளிப்படுத்தினான்.

பிரபஞ்சம் ஆகாயம், விண்வெளி என்று பல பெயர்களால் எதைக் குறிப்பிடுகிறோம்? நாம் வாழும் இந்த பூமி எங்குள்ளது, என்று சிந்தித்தால் நமது ஒன்றுமில்லாமையை உணரலாம். மனிதனுக்கு இறைவன் கொடுத்திருக்கும் தானம் இந்த பகுத்து அறிவும், சிந்தித்து செயலாற்றும் திறமை, உலகில் நாம் பார்க்கும் அசையும், அசையாத உயிர்கள் அனைத்திற்கும் ஓரறிவு முதல் ஐந்தறிவு மட்டுமே உள்ளது. மனிதனுக்கு மட்டுமே ஆறாவது அறிவு, சிந்தித்து செயலாற்றும் அறிவு உண்டு. அதனைப் பயன்படுத்தி சற்று சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.



## ஆட்சி பீடத்தில் கடவுள்?

–டாக்டர் அ. மதலைமுத்து, புதுவை–3.

சென்ற இதழ் தொடர்ச்சி...

**பிள்ளை வரம்:** கடவுள் மட்டுமே செய்விக்கக் கூடிய சில காரியங்கள் உள்ளன. அதையும் நாமே செய்ய முடியும் என்று முயற்சிக்கிறோம். கடவுளின் திருவுளத் திற்கு வழிவிட்டு பணிந்த நில்லுங்கள். உங்கள் பிள்ளை களை சரியானதை செய்ய வையுங்கள். நாம் அவர்களை ஊக்குவிக்க வேண்டும், அவர்களுக்காக செபிக்க வேண்டும். ஆனால், அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது. அவர்களுக்கு பலவீனங்கள், மற்றும் பிடிவாதங்கள் உள்ளன. ஆனால், அவர்களுக்கு சுதந்திரமாக முடிவெடுக் கும் ஆர்வம் உள்ளது. "**ஆண்டவரே! நீங்கள் அவர்களுடைய வாழ்க்கையை ஆட்சி செய்யுங்கள்**" என்று செபித்து கடவுளை அவர்களுடைய வாழ்க்கைக்குள் அழைத்திடுங்கள். அவர்களை கடவுள் பக்கம் திருப்புங்கள். கடவுள் அதிசயங்களைச் செய்வார்.

**அஞ்சியது நேர்ந்தது:** என் நண்பரின் தாய் ஒரு இயலாமைக்காக மருத்துவரிடம் அழைத்துச் செல்லப் பட்டாள். மருத்துவர் அவருக்கு 'பாரிச' வியாதி உள்ளது என்றார். ஆனால், அந்த மூதாட்டி, "**நான் வியாதியை ஏற்க மாட்டேன். குணமளிக்கும் ஆண்டவர் பார்த்துக் கொள்வார்**" என்று கூறி விட்டு புறப்பட்டார். அவர் எந்த பாதிப்பும் இல்லாமல் பதினைந்து ஆண்டுகள் வாழ்ந்தார். ஒரு ஆன்மீக கொள்கை உண்டு. நீங்கள், உங்கள் மனதில் ஒன்றை பெரிதாக எண்ணி, 'போற்றி' வந்தால், அதை உங்களுக்குள் நுழைய அனுமதிக்கிறீர்கள். அது, நல்லது என்றாலும், தீயது என்றாலும், உங்களை அது ஆட்டி வைக்கிறது. இடற்பாடுகள் வருவதை தடுக்க முடியாது. ஆனால், உங்களுக்குள் நுழைந்து பாதிப் பதைத் தவிர்க்கலாம். மறைநூலில் யோபு, "**நான், நிகழ்ந்து விடுமோ என அஞ்சியதுஎனக்கு நேர்ந்துவிட்டது**" என்று கூறுகிறார்.

**புதிய விடியல்:** இன்று புதிய நாள், மற்றும் புதிய விடியல். உங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி இழப்பு களுக்கு ஈடாக, இரண்டு மடங்காக கடவுள் வெகுமதிகள் வழங்குவார். ஏமாற்றங்களைத் தூக்கி எறியுங்கள். கடவுளுக்கு என்ன நடந்ததெனத் தெரியும். கடவுள் நீதியின் ஆண்டவராக இருக்கிறார். தவறுகள் திருத்தப் படும். முன்பை விடசிறப்பாக வாழ்வீர்கள். அதுதான் யோசேப்பின் வாழ்க்கையில் நடந்தது. அவருடைய வாழ்க்கையில் ஒன்றன்பின் ஒன்றாக துன்பங்களும் துரோகங்களும் நிகழ்ந்தன. சகோதரர்களே துரோகம் செய்தனர், அடிமையென அவரை விற்றார்கள், தவறாக அவர் மேல் குற்றம் சாட்டப்பட்டது, சிறையில் அடைக்கப் பட்டார். ஆனால் அவர் "கடவுள் தான் ஆளுகிறார்", என்று நம்பினார். அதனால், உலகமே எதிர்த்தபோதும் கடவுள் அவரை நாட்டின் அமைச்சராக்கினார். உங்களையும் ஏன் உயர்த்தமாட்டார் நண்பர்களே!

---

நாம் வாழும் இந்த பூமி இருப்பது சூரிய மண்டலம் என்பர். இது சூரியனைச் சுற்றிவரும் ஒன்பது கோளங்களில் ஒரு குடும்பம். இதனைப் போல பல சூரியன்கள் கொண்டதுதான் ஒரு காலக்ஸி என்பது. ஒரு காலக்ஸியில் ஆயிரக்கணக் கான சூரியன்கள் உண்டு. அவை வெகு தொலைவில் இருப்பதால் நமது கண்களுக்கு மிகச் சிறியதாக தோன்று கிறது. அப்படி ஒவ்வொரு விண் மீனும் நட்சத்திரமும் ஒரு சூரியன் என்றால், ஒவ்வொரு விண்மீனையும் சுற்றி வரும் இந்த பூமி, சூரியன் குடும்பம் போல் பல கோளங்கள் அந்த ஒரு விண்மீனைச் சுற்றி வருகின்றன. இப்படி விண்வெளியில் பல காலக்ஸிகள் உண்டு. நமது பூமி இருக்கும் சூரியனை உள்ளடக்கிய காலக்ஸிக்கு (Milkyway) பால்வழி என்று பெயர்.

தொடரும்...



## இளையோரை... இறையாட்சிக்கு ஆற்றுப் படுத்துவோம்!! (கல்வி)

தொடர்ச்சி.. - வெட்டிவயல் வளவன்.M.A.,M.A.B.Lit

வாழ்க்கை என்பது ஒரு "ஐஸ் கீரிம்" மாதிரி. அதை உருகுமுன் பருகிவிட வேண்டும் என பல இளைஞர் எண்ணுகின்றனர். அது தவறு. **வாழ்க்கை என்பது ஒரு மெழுகுதிரி. அது உருகும், ஒளிதரும், - அந்த ஒளி பிறர்க்கு பயன் தரும், பலரின் இருளைப் போக்கும். . என்று எண்ண வேண்டும். இதுதான் மனித நேயத்தின் வெளிப்பாடு. இளைய கீதங்களே!** நீங்கள் பெறும் கல்வி மெழுகுதிரியாக பிறர்க்குப் பயன்படவேண்டும். ஈ.வெ.ரா. பற்றி உங்கட்கு தெரியும். பள்ளிக்கல்வி குறைவு. ஆனால், அவரிடம் பட்டறிவு கல்வி, வாழ்க்கையில் பெற்ற அறிவும், உச்சத்தை தொட்டு 96 வயது வரை, புத்தகங்களை அலசியவர். 120 புத்தகங்கள் எழுதி குவித்தவர், பெரியார் தாம் கற்ற கல்வியை, தம்மைச் சுற்றி வாழ்ந்த அடிமட்டமான வாழ்வும், எடுத்துச் சொல்லி, **மூடப்பழக்கம் ஒழிக்க பாடுபட்டார்.** சாதி, மதம் பெயரால் கொலை செய்யப்பட்டதை கண்டு துடித்தவர். அவரால் கொடுக்கப்பட்ட, சமூகக் கல்வி தான், தமிழ் மண்ணில் திராவிடக் கட்சிகள் ஆட்சியில் அமர வைத்ததை சிந்தியுங்கள்.

இளம் உள்ளங்களே! நாட்டின் தூண்களே! படியுங்கள் படியுங்கள் ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் படியுங்கள். அறிவு உங்கள் வீட்டு வாசலைத் தட்டும்; புறக்கணித்து விடாதீர். மகிழ்ந்து படியுங்கள். கல்வியும், நூல் கல்வியும் ஒரு மனிதனை முழு மனிதனாக ஆக்கும். சோம்புவோர் தான் முதியோர். வயது ஆனாலும் சுறுசுறுப்பாய் இயங்குபவர் இளைஞரே!

**இதய மடல் விரிக்கும் அரும்புகளே! கல்வி ஏன் கற்க வேண்டும் என்பதையும், நல்ல கல்வி கற்பதின் மாண்பினையும் பெற்ற நாம், சமூகத்துக்கு உரிய வகையில் பயனாளிகளாக வேண்டும். மற்றவர்களுக்கு கற்பித்தல் ஒழுக்கம் -**ஏட்டு கல்வியை மட்டுமல்ல, பல்துறை சார்ந்த - வாழ்வியல் கல்வியியல் கல்வியையும் கற்றுக் கொடுக்கும் பொறுப்பு இளையோர்க்குதான் உண்டு. **அதனால் இறையாட்சி மதிப்பீடுகளை சுமந்து, எண்ணற்ற துறவிகள் (உண்மை) சகோதரிகள் வலம் வருகின்றனர்.** இந்த சமூகம் உங்களிடமிருந்து பொறுப்புணர்வு, மனித நேயம் - வாழக்கற்றல், போன்றவைகளை எதிர்பார்க்கின்றன. பள்ளிகள் - கல்வியாளர்கள் - கற்றுத்தர வேண்டிய சமூக கூடங்கள், நிறுவனங்கள் ஆகிவிட்டன. **நாட்டில் கார்பரேட் காவிச் சாமியார்கள், மருத்துவர்களாக - யோகிகளாக - இன்னும் பல விதத்தில் பல கோடிக்கதிபதிகளாக பவனி வருகின்றனர்.** உண்மையான பள்ளிகள் - கல்வியாளர்கள் - சமூக ஆர்வலர்கள் கற்றுத் தர வேண்டிய, பல நிலைக் கல்விமுறை **ஒழுகலாறுகள் பாழ்பட்டு, சீழ்பிடித்துப் போய் உள்ளன.** பணம் குறிக்கோள் ஆகிவிட்ட நிலையில், சிந்தனைச் சுடர்களே! "கரு"க்களே! நீங்கள் முனைப்புடன்செயல்படாவிடில் இனி வருங்காலம் - வளரிளம் சமூகம் -சந்ததிகள் சின்னாபின்னமாகிவிடும். உலகில் மூன்று மாதமே இலையுதிர் காலம் - விழிக்காவிடில் வருடம் முழுதும் "கொலை" உதிர்காலம். ஆகும். ஆகவே சமூகம் சீரழிந்து, கூனிக் குறுகி வளைந்து போகாமல் தாங்கிப் பிடிக்கும் நெம்புகோல்கள் நீங்கள் தான் - திண்ணம்.

**ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது -** அருமையாகச் சொன்னார்கள் நம் முப்பாட்டன்கள்.நக்ஸலைட்டுகள் - மாவோயிஸ்டுகள் - தீவிரவாதக் குழுக்கள் - துறவிகளை அச்சுறுத்தும் நம் நாட்டிலும், உங்களது விழிப்பு நிலையும், வழிகாட்டலும் இயங்க வேண்டும். ஏட்டுக் கல்வியை, கல்வி நிலையங்கள் தரலாம். வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்ந்து காட்டி வானுறை தெய்வத்துள் வைக்க, நம் பழம்பெரும் நூற்கள் - பாட்டன் பாட்டிகதைகள்- நெறிமுறைகள்- மாமன் மச்சான் பாட்டி பாட்டன் - பூட்டன் உறவுகள்தான் (சில தவறுகள் இருக்கலாம்) தரமுடியும். இந்த உறவுகளின் பாலமாக திருவிழா திருமணம் விருந்து கொண்டாட்டம் - திருப்பயணம் போன்ற வற்றில் பெறும் உறவும்,மாண்பும் வாழ்க்கைக் கல்வியும் - கற்று உணர்திறனும் - புறம்தள்ளப்பட்டுப் போயின.

தொடரும்..



104 இளம் உள்ளங்களுக்கு

## இலட்சியப் பயணம்

– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**டாக்டர் டேவிட் லிவிங்ஸ்டன்:** "முன்னோக்கிச் செல்வதென்றால், நான் எங்கு வேண்டுமானாலும் செல்லத் தயார். அவநம்பிக்கையில் என் வேலையை விடச் செய்வதற்கு இந்த பூமியில் எந்த சக்தியாலும் முடியாது. போக்குவரத்து சாலைகள் இருந்தால் மட்டுமே உடன் வருவேன் என்று சொல்லும் மனிதர்கள் தேவையில்லை; சாலைகளே இல்லாத இடத்திற்கு வரத்தயாராக உள்ள மனிதர்களே எனக்குத் தேவை."

**வாழ்வின் இலட்சியம்:** டேவிட் லிவிங்ஸ்டன் 1813 ம் ஆண்டு ஸ்காட்லாண்டில் ஏழை பெற்றோருக்கு மகனாகப் பிறந்தார். சிறுவயதிலிருந்தே அறியப்படாத உலகப் பகுதிகளை ஆராயவும், கிறிஸ்தவ மறைப்பரப்பு சேவை செய்யவும் மிக்க ஆர்வமாக இருந்தார் லிவிங்ஸ்டன்.

**தாமஸ் டிக்** எழுதிய புத்தகம் அடிமைத்தளையில் இருந்து மக்களை விடுவிக்கும் பணிக்கு அவரைத் தூண்டியது. ஒரு பயிற்சி பெற்ற மருத்துவராக இருந்தால் சேவை செய்ய பயனுள்ளதாக இருக்கும் என்று எண்ணி படித்து தமது 27ம் வயதில் மருத்துவரானார். அவர் கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு கிறிஸ்துவை எடுத்து செல்ல விரும்பியதால், யாரும் அதிகம் அறியாத ஆப்பிரிக்காவிற்கு பயணம் ஆனார்.

**ஆப்பிரிக்காவின் அவலம்:** 19ம் நூற்றாண்டின் தொடக்கம் வரை ஆப்பிரிக்கா **இருண்ட கண்டம்** என்றே அழைக்கப்பட்டது. ஏனெனில் ஆப்பிரிக்காவின் கடற்கரைப் பகுதிகளைத் தவிர அதன் உட்பகுதிக்கு யாரும் சென்று வந்ததில்லை. ஆப்பிரிக்காவின் மையப்பகுதிகளை ஆராய்ந்து ஆப்பிரிக்கர்களின் அவல நிலையை வெளிச்சம் போட்டு வெளி உலகிற்கு காட்டியவர்தான் டாக்டர் டேவிட் லிவிங்ஸ்டன். அங்கே சாலைப் போக்குவரத்து, படகு போக்குவரத்து என்று எதுவும் சரியாக இல்லை. எந்த தொழில் வளர்ச்சியோ, மருத்துவ வசதியோ இல்லாத சூழலில் அவர்கள் அடிமைகளாக வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டு வந்தனர். அவர்களை அச்சூழலில் இருந்து விடுவிப்பதன் மூலம் மட்டுமே அவர்கள் வாழ்வை மாற்ற முடியும் என்று லிவிங்ஸ்டன் முடிவு செய்தார். கிறிஸ்துவ மறைப்பரப்பாளர்கள் (Missionaries) அழைத்து அவர்கள் உதவியுடன் கல்வி, சுகாதாரம், தொழில் வாய்ப்பு களை பிரிட்டிஷ் அரசு மூலம் ஏற்பாடு செய்தார். ஆப்பிரிக்காவில் நடக்கும் அடிமை வியாபாரம் எவ்வளவு மோசமானது என்று ஐரோப்பியர்களுக்கு விளங்க வைத்தார். இத்தருணத்தில்தான் ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவில் அடிமைத்தனத்தை எதிர்த்து போராடிக் கொண்டிருந்தார். லிவிங்ஸ்டன் ஆப்பிரிக்கர்களை அடிமைத் தளத்தில் இருந்து மீட்டு முதன் முதலாக சம்பளம் வாங்கும் தொழிலாளர்களாக வேலைக்கு அமர்த்தினார். இதுவரை அடிமை வியாபாரம் செய்து வந்த டோபு தொப் என்பவனை மனித சந்தைகளை நிறுத்தி அங்கு உற்பத்தியாகும் பொருட்களை வாங்கி விற்கும் வியாபாரியாக மாற்றினார். இதனால் பிரிட்டனில் புகழ் பெற்ற மனிதராக லிவிங்ஸ்டன் பிரகாசித்தார்.

**கண்டுபிடிப்புகள்:** லிவிங்ஸ்டன் சிறந்த ஆராய்ச்சியாளராகவும் இருந்தார். அவருடைய பெரிய கண்டுபிடிப்பு ஸாம்பஸி (Zambesi) ஆறும், விக்டோரியா ராணியின் நினைவாக பெயர் சூட்டப்பட்ட விக்டோரியா நீர் வீழ்ச்சியுமாகும். இது உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சியாகும். இது அமெரிக்காவில் உள்ள நயாகரா நீர்வீழ்ச்சியை போன்று இரு மடங்கு உயரமுடையது.

**முடிவும் விடிவும்:** லிவிங்ஸ்டன் தன் கடைசி பயணத்தின்போது நைல் நதியின் மூலத்தை கண்டுபிடிக்க முயற்சி செய்தார். இதே முயற்சியை கி.மு.460ல் ஹெரோடிட்டஸ் (Heroditus) செய்ததாக சரித்திரம் கூறுகிறது. இந்த கடைசி பயணத்தின் போது மலேரியா நோயினால் தாக்கப்பட்டு 1873-ல் மரணமடைந்தார். அவரை ஆன்மீக வாதியாகவும், அடிமைத்தளை அறுத்த தனிப்பெரும் தலைவராகவும், சிறந்த சீர்திருத்தவாதியாகவும், ஆப்பிரிக்கர்களின் அவலங்களை வெளி உலகிற்கு வெளிச்சம் போட்டுகாட்டியவராகவும் உணர்ந்த ஆப்பிரிக்கர்கள் அவர் உடல் மத்திய ஆப்பிரிக்காவிலிருந்து கடற்கரை பகுதியான ஸான்சிபார் (Zanzibar) கொண்டு வந்தனர். அங்கிருந்து அவர் உடல் இங்கிலாந்து எடுத்து செல்லப்பட்டு பிரசித்தி பெற்ற வெஸ்ட் மின்ஸ்டர் அபேயில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவர் பெயருக்கேற்ப ஆப்பிரிக்கர்களின் இதயத்தில் அவர் ஓர் LIVING STONE ஆக விளங்குகிறார்.



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



## 21-ஆம் படலம்

வாதை 8– வெட்டுக்கிளிகள் – ஆண்டவர் மோசேயை நோக்கி "கல் மழைக்குத் தப்பி நாட்டில் நிற்கும் எல்லாப் பயிர் பச்சைகளையும் தின்று தீர்க்க எகிப்து நாடெங்கும் வெட்டுக்கிளிகள் வரும்படியாக எகிப்து நாட்டின்மேல் உன்கையை நீட்டு" என்றார். விப.10:12

காப்பியப் பாடல் 1038

**1 பார்வோன் இன்னும் தன்பலம் பெரிதென எண்ணுகிறான்.**

பார்வோன் இன்னும் நம்பினான் தன்பலம்!
ஊர்வாழ் மக்கள் உறுதுயர் யாவும்
மாயமாய் மறைந்தே போனத னாலே,
தேயமே பெரிதென அதன்புகழ் தேய்ந்திட
இடம்ஒரு போதும் தரத்தன் தடந்தோள்
உடன்படல் எதற்கென உள்ளினன் மமதையில்;
மல்லுக் கட்டியே பார்க்கும் மனத்தனாய்
இல்லின் உள்ளே இருந்தே பொறுமினான்!

காப்பியப் பாடல் 1039

**2 நாட்டின் மக்கள் கல்மழை வாதையால் இன்னும் உள்ளம் நொந்தனர்**

மன்னன் மனமது இறுகிப் போனதால்,
முன்பு யாவே இட்ட கட்டளை
முற்றும் மறுத்தனன்; அவன்பணி யாளரும்
சற்றும் மாற்றம் கொள்ளா திருந்தனர்;
நடந்ததை எண்ணியே நாட்டின் குடிகளோ,
கடந்தக் கல்மழை வாதை போயினும்
அழிந்த பயிர்களின் நிலபுல வருவாய்.
ஒழிந்த தனாலே உளம்நொந் தேங்கினர்;
எகிப்து எங்கணும் மக்கள் படுந்துயர்
முகிலின் இடியென அடிவயி றெரியச்
செய்தது அந்தோ பாவம் அவர்நிலை!
வெய்துயிர்த் தழும்நிலை வெறுமையால் வந்ததே!

காப்பியப் பாடல் 1040

**3 கல்மழையால் நாட்டின் விளைச்சல் பாழ்பட்டது.**

இருண்டது நாட்டின் பொருள்வாழ் வனைத்தும்
மருண்டனர் மக்கள்! மன்னன் செயலறு
நிலையைப் பார்த்தே நெஞ்சம் அஞ்சினர்!
அலைகள் புரளும் கடலது புகுந்தே
நாட்டையே நலிவுறச் செய்வதைப் போன்றே
கேட்டையே அவர்தம் வாழ்வினில் கண்டதால்
நடுங்கி ஒடுங்கினர்! தெய்வக் காவலும்
படுத்தே போனதால் பதறிக் கதறினர்!

காப்பியப் பாடல் 1041

**4 கடவுளின் பிறப்பினனாகிய பார்வோனால் யாவேயை எதிர்க்க இயலவில்லை.**

பார்வோன் கடவுள் பிறப்பின னாக
கூர்வேல் தாங்கி வருபகை யாவும்
இல்லா தொழிப்பான் என்றே நம்பிய
இல்ல மங்கையர், என்னுறு மோவென
இரவும் பகலும் கண்ணீர் வடித்தனர்!
வரம்இல் லோமென கைபிசைந் தேங்கினர்!

தொடரும்..

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :** சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன்பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

**2018-2019** சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO செய்பவர்கள் **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.

# இவன் குற்றச் செயலுக்கு யார் காரணம்

–G. *பொனிபாஸ் ஜூலியன்,* புதுவை–9.



ஒரு வியாபாரி ஒரு பேக்கரி கடை வைத்து வியாபாரம் செய்து கொண்டு வந்தார். பேக்கரி கடை என்றால் முக்கியமாக கேக்,ரொட்டி சில தின்பண்டங்கள் கிடைக்கும். ஒரு சில ஊழியரை வைத்துக்கொண்டு இந்த வியாபாரி தன் தொழிலை நடத்தி வந்தார். தினமும் அவர் கடையை மூடிவிட்டு இரவில் வீடு செல்வதற்கு முன்னால், தன்னுடைய பொருள்களை கணக்கெடுப்பார். அப்படி அவர் கணக்கு பார்க்கும் போது, சில ரொட்டித் துண்டுகள் காணாமல் போனது தெரியவந்தது. மற்றப் பொருட்கள் அனைத்தும் சரியாக இருக்கிறது. ஆனால் ரொட்டி மட்டும் சில துண்டுகள் குறைவாக இருந்தது. இது ஒரு நாள் மட்டுமல்ல, பல நாட்கள் இப்படியே இருந்தது. யாரோ இந்த ரொட்டித் துண்டுகளை திருடிச் சென்று சாப்பிடுகிறார்கள் என்று அந்த வியாபாரியே உணர்ந்தார். இதை கண்காணிக்கும் பொருட்டு இதில் ஈடுபட்டார். அப்போது ஒருநாள் கையும், களவுமாக ஒரு ஆளைப் பிடித்தார். அவன் தினமும் திருடியதை ஒப்புக் கொண்டான். தன் பசியைப் போக்க யாரும் உதவி செய்யாததால் இந்த திருட்டுத் தொழிலை செய்து வருகிறேன் என்று கண்ணீரோடு கூறினான். இதை கேட்ட அந்த வியாபாரி, மனம் இறங்கி, அவனை மன்னித்து, அவனுக்கு ஏதாவது ஒரு வேலை கொடுத்து இருந்தால், இவ்விதமான நிகழ்ச்சி நடக்க வாய்ப்பில்லை. இதற்கு மாறாக, அந்த வியாபாரி அவனை நீதி மன்றத்தில் ஆஜர் படுத்தினார். இது நீதிமன்றம் செல்ல வேண்டிய வழக்கே அல்ல. இதை மனிதாபிமானத்தோடு அந்த வியாபாரியே முடித்திருக்கலாம்.

நீதிபதியின் முன்னால், இவன் பல நாட்களாக செய்து வந்த திருட்டு தனத்தையும், இதனால் தனக்கு ஏற்பட்ட நஷ்டத் தையும், நீதிபதியிடம் கூறினார். குற்றவாளி இந்த குற்றங்கள் அனைத்தையும் ஒப்புக்கொண்டான். தன் பசியினால் இந்தச் செயலை தினமும் செய்ததாக நீதிபதியிடம் கூறி கண்ணீர் விட்டான். நீதிபதி, குற்றம் குற்றமே. அவன் செய்தது சிறு திருட்டு ஆனாலும், அதுவும் குற்றம்தான் என்று கூறி அவனுக்கு ரூபாய் 1000 தண்டனை விதித்தார். கட்டத் தவறினால் 3 மாதம் சிறை தண்டனை என்றார். கோர்ட்டில் கூடியிருந்த அனைவரும் எப்படி 1000 ரூபாய் கட்ட முடியும் என்று யோசித்து கொண்டிருந்தார்கள்.

தீர்ப்பு கூறியபின், நீதிபதி தன் இருக்கையை விட்டு எழுந்து, தன் கோட்டை அவிழ்த்துவிட்டு, மக்கள் மத்தியில் வந்து, அந்த குற்றவாளியை நோக்கி சென்று, இப்போது நான் நீதிபதியாக வரவில்லை, சாதாரணமாக ஒரு குடிமகனாக இங்கே வந்து இருக்கிறேன்; அந்த குற்றவாளியிடம் இனி இவ்விதமான தவறுகளை செய்யாதே, உழைத்து சம்பாதித்து சாப்பிடு என்று கூறி தன் பர்ஸை திறந்து ஆயிரம் ரூபாய் அவனிடம் கொடுத்து அதை நீதிமன்றத்தில் செலுத்திவிட்டு மனம் மாறி, நல்ல மனிதனாக போ என்று கூறி சென்றுவிட்டார்.

இந்த ஒரு நிகழ்ச்சி அனைவரது உள்ளத்தையும் தொட்டது. இந்த செயலுக்கு அவன் மட்டும் காரணமல்ல, இந்த சமூகமே காரணம். சமூகம் அவனுக்கு உதவி செய்திருந்தால் இந்த தொழிலை அவன் செய்திருக்க மாட்டான். மற்றவருடைய பசியைப் போக்க நாம் உதவி செய்ய வேண்டும்.

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பார்கள். அதாவது **மானம், ஈனம், பணம், குணம், அந்தஸ்து, பட்டம், பதவி,பேர், புகழ்ச்சி, உறவு.** இந்த வலி வராமல் இருக்க நாம் மற்றவர் களுக்கு உதவி செய்ய வேண்டும். ஒரு சிலரிடம் அதிகப் படியான செல்வங்கள் குவிக்கப்பட்டுள்ளதால்,அநேக ஏழைகள் உருவாக வாய்ப்புண்டு. இறக்கும்போது ஒரு குண்டு மணி சொத்துக் கூட எடுத்து செல்ல முடியாது என்பதை உணர வேண்டும். இந்த உலகில் இருக்கும் போதே மற்றவர்களுக்கு உதவி செய்து நல்லப் பெயரை வாங்கலாம். இதற்கு கடவுளுடைய ஆசீர் வேண்டும்.●

**தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-184**
**டிசம்பர் மாத வெளியீடு. (2018)**
**அருட்சகோதரர் அ.மே.ஜேம்ஸ்,**

**வா**ரம் தவறாமல் 112 ஆண்டுகளாக மலர்ந்து வரும் சர்வவியாபி இதழின் நறுமணத்தை முழுமையாக முகர்ந்து அனுபவித்து வரும் வாசகர் பெருமக்களுக்கு கிறிஸ்மஸ் பெருவிழா மகிழ்ச்சியுடன் சிரித்த முகத்துடன் ஜெபத்துடன் கூறிக் கொள்கிறேன். டிசம்பர் மாதம் வந்தாலே புத்தாடை, கேக், வீடு அலங்கரிப்பு,கோயில் அலங்கரிப்பு, ஒரே பிஸியாக இருப்போம். காரணம் நம் உள்ளத்தில் இயேசு வரவேண்டும் என்ற ஒரே நோக்கம் நம் மனதில் ஆசை எழுகின்றது. இயேசு நம் உள்ளத்தில் வரவேண்டுமானால் நம்மிடம் இருக்கக் கூடாத "**மை**" பெரு**மை** யாக்.4:6 கொடு**மை** நீதி 3:31, மன்னியா**மை** மாற்கு 11:26, கீழ்படியா**மை** எபே.5:6, மேட்டி**மை** உரோ.11:20, பொறா**மை** நீதி.24:19, பகை**மை** லேவி.19:17, **தீமை** 2திமோ.4:14 ஆகியவற்றை நீக்கினால் நம் உள்ளத்தில் இயேசு வருவாய் என்ற உணர்வுடன் வாழ முயற்சி செய்யுங்கள். வாழ்வது ஒருமுறை மட்டும்தான் என்பதை உணர்ந்து நல்லதையே நினைத்து நற்பண்பு உள்ளவர்களாய் வாழ்ந்து என்றும் மகிழ்ச்சியோடு வாழ கிறிஸ்மஸ் பெருவிழா நாளில் வாழ்த்தி ஜெபிக்கிறேன்.

இறை ஊழியன் அருட் சகோதரர். **அ.மே.ஜேம்ஸ்**

**குறிப்பு:** 1) பதில்களை **10–01–2019** க்குள் அனுப்பி வைக்கவும். 2) ஆசிரியரின் இறுதித் தீர்ப்பே முடிவானது. 3) பதிலை அதிகாரம், வசனத்துடன், சரியான முகவரியுடன் எழுதவும். 4) குலுக்கல் முறையில் முதல் **10** நபர்களுக்கு பரிசுகள் அனுப்பி வைக்கப்படும். 5) பதில்களை இன்லேண்ட் (உள்நாட்டு) கடிதத்தில் (அ) ஐந்து ரூபாய் ஸ்டாம்பு ஒட்டிய கவரில் மட்டுமே எழுதி ❖குறியிட்ட முகவரிக்கு அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன். 6) அல்லது e-mail: soosaimariarajendran @ gmail.com என்ற முகவரிக்கும் அனுப்பலாம்.

**இடமிருந்து வலம்:**

1. என்னோடு பேசியவர் யார் என்று...........த் திரும்பினேன்.
3. மக்களைக் கடவுளுக்கென்று விலை.........மீட்டுக் கொண்டீர்.
6. அடிக்கற்கள்............யுயர்ந்த எல்லாவித கற்களாலும் அணி செய்யப்பட்டிருந்தன.
7. அந்த விண்.........எட்டி என்பது பெயர்.
8. யாழை மீட்டுவோர் எழுப்பும் இசை ..............ஒலித்தது.
9. கடவுளின்...........என்பது அவரது பெயர்.
13. அதன்..............வற்றிப் போனது.
15. இனி யாரும்.............க்காணப் போவதில்லை.
17. அவற்றின் நடுவே...........மகனைப் போன்ற ஒருவரைப் பார்த்தேன்.

**வலமிருந்து இடம்:**

1. பகைவர்கள்...........க் கொண்டிருக்க அவர்கள்.
3. இவர்கள்..............வேதனையிலிருந்து மீண்டவர்கள்.
6. முதல்............மண்ணுகும் அதில் வாழ்வோரும் வணங்கும்படி செய்தது.
8. சிறகுகளின் இரைச்சல்................விரையும் தேர்ப்படையின்.
11. மண்ணுலகில்...........அனைவரும் அதை வணங்குவர்.
17. ஐயோ...............நீ கேடுற்றாயே!
20. வாயிலிருந்து கூர்மையான............ஒன்று வெளியே வந்தது.
21. இயேசுவுக்குச் சான்று பகர்ந்ததால்...........தீவுக்கு வர நேர்ந்தது.

**மேலிருந்து கீழ்:**

1. நீ சோதித்துப்..............அவர்கள் பொய்யர்கள் என்று கண்டறிந்தாய்
2. அமர்ந்திருந்த ஒரு .............க் கண்டேன்.
4. அவை.............ஏழு ஆவிகளே.
5. மண்ணுலகே...............ஐயோ! உங்களுக்குக் கேடு.
9. அவற்றின் வாயிலும்.............இருந்தது.
12. எல்லா மக்களினங்களும் உம் திருமுன் வந்து............
18. அவருடைய............தீப்பிழம்பு போலத் தென்பட்டன.
19. பின்பு..............வெண்மையான ஓர் அரியணையைக் கண்டேன்.

**கீழிருந்து மேல்:**

2. வெற்றி..............இவ்வாறு வெண்ணாடை அணிவிக்கப் பெறுவர்.
5. ஏழு முத்திரைகளுள் முதலாவதை உடைக்கக்........
6. அவர்களது சினம் வெளிப்படும் கொடிய நாள் வந்து.........
8. அவரைப்....................ப் புகழுங்கள்.
10. அவரது மறைவான............நிறைவேறும் என்றார்.
11. மழை பொழியாதவாறு. ........... அடைத்து விட அவர்களுக்கு அதிகாரம் உண்டு.
12. இத்தீர்ப்புகளை.............நீர் நீதியுள்ளவர்.
14. சிறிது காலமே ஆட்சி புரிய..............
16. அரசர்கள் மீது ஆட்சி செலுத்தும்...............ஆகும்.
18. பழகக்.............போன்றும் அதன் ஒளி பளிங்கெனத் துலங்கியது.

**திருவெளிப்பாடு**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | | | 1 | | | 4 |
| | 19 | | 13 | | | | | | |
| | | | | 20 | | | | | |
| | | | 3 | | | | 2 | | |
| | | 14 | | 21 | | | | | |
| | 18 | | | | 11 | | | 12 | |
| 10 | | | | | | 6 | | | |
| | | | 17 | | | | ■ | | 5 |
| ■ | | 16 | ■ | 15 | | | | | |
| 7 | | | | | | 8 | | | |


❖ **அருட்சகோதரர் ஏ.மே. ஜேம்ஸ்,**
தூய மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்,
தாராபுரம் – 638 656, திருப்பூர் –Dt.
செல்: **95979 75430**


**ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்**

புதுவை-கடலூர் உயர் மறை மாவட்டம், அத்திப்பாக்கம் பங்கில் Socius (சோசியுஸ்) ஆக பணியாற்றும் அருட்தந்தை R. லூர்து ஜெரார்டு அவர்களின் அன்னை திருமதி. **பெர்நதெத்** (வயது 78) அவர்கள் 22-11-2018 வியாழன் அன்று இறையடி சேர்ந்தார். 23-11-2018 வெள்ளி அன்று மாலை 3.00 மணி அளவில், கொம்மேடு புனித சூசையப்பர் பங்கு ஆலயத்தில் நடைபெற்ற அடக்குச் சடங்கு திருப்பலியை அருட்திரு. R. லூர்து ஜெரார்டு அவர்கள் தலைமை ஏற்க, நமது உயர் மறை மாவட்ட முதன்மை குரு பேரருள்திரு. ஆ. அருளானந்தம் அவர்களுடன் சுமார் 30 அருட்தந்தையர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியை நிறைவேற்றினர். அருட் சகோதரிகளும் ஏராளமான இறை மக்களும் இத்திருப்பலியில் கலந்து கொண்டு, இறையடி சேர்ந்த அடியாருக்காக செபித்தனர். திருப்பலிக்குப்பின் திருமதி.பெர்நதெத் அவர்களின் திருவுடல் கொம்மேடு கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னையை இழந்து துயருறும் அருட்தந்தை R. லூர்து ஜெரார்டு, அவரது உடன்பிறப்புகள் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இறையடி சேர்ந்த திருமதி. பெர்நதெத் அவர்களின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றி அடைவதாக.

## விண்ணக வாழ்வின் 5-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

## நினைவு அஞ்சலி



**திரு. ரோக் செல்வநாதன்**

**மலர்ந்தது:29-10-1923**
**உதிர்ந்தது:03-12-2013**

**திருமதி.மரி ஜோஸ்பின் ரோசாலி ரோக்**

**மலர்ந்தது:01-10-1931**
**உதிர்ந்தது:15-03-2009**

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25**

**செபம்**

இறைவா! அன்பிற்கும் இரக்கத்திற்கும் உறைவிடமான ஆண்டவரே, ஆத்துமங்களை இரட்சிப்பவரே, உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட எங்கள் பெற்றோர்

**திரு. ரோக் செல்வநாதன் - திருமதி. மரி ஜோஸ்பின் ரோசாலி ரோக்**

அவர்களின் ஆத்துமத்திற்கு இரக்கம் புரிந்து முடிவில்லா பிரகாசத்தை தந்தருள உம்மை மன்றாடுகிறோம், ஆமென்.

பிரிவால் துயருறும்

**மகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள்**
**மற்றும் குடும்பத்தினர்.**

***03-12-2018 திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு கோட்டுச்சேரி சகாய அன்னை ஆலயத்தில் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி நிறைவேற்றப்படும்.***

***8-12-2018 மாலை 6.00 மணிக்கு பிரான்ஸ் Ermont யில் உள்ள புனித Flaive தேவாலயத்தில் நினைவு திருப்பலி நிறைவேற்றப்படும்.***

**நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே.**

# விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி











**தோற்றம்**
**10-07-1921**

**மறைவு**
**07-11-2018**

## திருமதி. பெலிசித்தே தெலாமூர்

## W/o. திரு. சௌந்தரராஜ்

*"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"* - (*யோவான்.11:25*)

அன்பின் ஊற்றாய்
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
நேசத்தின் நினைவிடமாய்
இறைவாழ்வே நிறைவாழ்வாய்
இம்மண்ணில் மலர்ந்து
விண்ணில் ஒளிரும்
கண்ணின் கருவிழியாய்

எமைப் பேணிப் பாதுகாத்த
எங்கள் தாய் **பெலிசித்தே தெலாமூர்**
ஆன்மாவிற்கு
நித்திய இளைப்பாற்றியை
நித்தமும் தந்திட
இறைவா இறைஞ்சுகிறோம்
விரைவாய் அருள்வாய். - ஆமென்.

- ஒரு கர்.மங்.திரி.

**என்றும் உம் நினைவில்**
**மகன்கள் - மருமகள்கள், மகள்கள் - மருமகன்கள்**
**பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.**

**06-12-2018: வியாழக்கிழமை**

**புதுவை, திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில், காலை 6.00 மணி, மதியம் 12.00 மணி, மாலை 6.00 மணி.**

**தாகூர் நகர், தூய ஆவியானவர் ஆலயத்தில் காலை 6.15 மணி, மாலை 6.00 மணி.**

**அரியாங்குப்பம், ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் காலை 6.00 மணி, மாலை 5.30 மணி.**

**திருப்பலி நிறைவேற்றப்படும்.**

**மேரி கோம் உலக சாதனை:** உலக மகளிர் குத்துச் சண்டை போட்டியில் 6-ஆவது முறையாக தங்கப் பதக்கம் வென்று மீண்டும் சாம்பியன் ஆனார் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை மேரி கோம். ஏற்கெனவே 5 முறை தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் வென்றுள்ள இவர் 48 கிலோ இறுதிச் சுற்றில் உக்ரைன் வீராங்கனை ஹன்னாவை வீழ்த்தி மீண்டும் சாம்பியன் பட்டம் வென்றார். இதன் மூலம் அவர் உலகப் போட்டியில் 7- ஆவது பதக்கம் வென்று சாதனை படைத்தார். *-தினமணி.25.11.18*

**பாகிஸ்தான்:** பாகிஸ்தான் நாட்டின் கைபர் பாக்துன்கவா மாகாணம் அபோட்டாபாதில் சிறுவர்களின் கிரிக்கெட் ஆட்டத்தின்போது இரு அணிகளுக்கிடையே தகராறு ஏற்பட்டது. அதையடுத்து, இது குறித்து புகார் அளிப்பதற்காக சிறுவர்களின் பெற்றோர் இரு குழுக்களாக அருகிலுள்ள காவல் முகாமுக்கு வந்தனர். அப்போது இரு குழுவினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டு, ஒருவரை ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டனர். இதில் ஒரு குழுவைச் சேர்ந்த 4 பேரும், மற்றொரு குழுவைச் சேர்ந்த 3 பேரும் உயிரிழந்ததாக போலீசார் தெரிவித்தனர்.

**நியூசிலாந்து: வெலிங்டன்:** நியூசிலாந்தில் இரு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கம் காரணமாக, அந்த நாட்டின் இரு முக்கியத் தீவுகள் இடையேயான இடைவெளி குறைந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். கடந்த 2016-ஆம் ஆண்டு நவம்பர் 24-ஆம் தேதி ஏற்பட்ட 7.8 ரிக்டர் அளவு கொண்ட நிலநடுக்கத்தால், நியூசிலாந்தின் வடக்கு மற்றும் தெற்கு தீவுகளுக்கிடையே யான இடைவெளி 35 செ.மீ அளவுக்கு குறைந்துள்ளது. தெற்கு தீவின் நெல்ஸன் நகர் தரைமட்டம் 20 மி.மீ அளவுக்கு கீழிறங்கி யுள்ளது, என்றும் அவர்கள் தெரிவிக்கிறார்கள். - ***தினமணி.25.11.18***

**ஆப்கானிஸ்தான்: காபூல்:** ஆப்கானிஸ்தானில் பணியாற்றி வந்த அமெரிக்க ராணுவ வீரர், சனிக்கிழமை நடைபெற்ற தாக்குதலில் உயிரிழந்ததாக நேட்டோ படை தெரிவித்தது. இது குறித்து முழு விவரங்களை அதிகாரிகள் தெரிவிக்கவில்லை. இத்துடன் இந்த ஆண்டில் மட்டும் ஆப்கானில் கொல்லப்பட்ட அமெரிக்க வீரர்களின் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது. - *தினமணி, 25.11.2018*

**சென்னை:** சென்னை மாதவரத்தை அடுத்த ரெட்டேரி அருகே ஆட்டுச் சந்தை நடைபெறும் இடம் உள்ளது. இங்கு குப்பைகள் போடும் இடத்தில் பழைய ரூ.1000 மற்றும் ரூ.500 நோட்டுகளை மூட்டைகளாகக் கட்டி குப்பையில் வீசி இருப்பதாக வந்த செய்தியை முன்னிட்டு, காவல் துறையினர் அங்கு விரைந்து சென்று 45 க்கும் மேற்பட்ட மூட்டைகளில் துண்டு துண்டாக நறுக்கப்பட்ட இந்த நோட்டுகளை கைப்பற்றினர். இது குறித்து போலீஸ் விசாரணை நடைபெறுகிறது. - *தினமணி, 27.11.2018*

**புதுடெல்லி:** பள்ளிகளுக்கு மத்திய அரசு உத்தரவு: ஒன்றும் மற்றும் இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு வீட்டுப் பாடம் அளிக்கக் கூடாது என்று பள்ளிகளுக்கு மத்திய மனித வள மேம்பாட்டு அலுவலகம் உத்தரவிட்டுள்ளது. மேலும், மாணவ மாணவியர் பள்ளிக்குக் கொண்டுவரும் புத்தகங் களின் எடையும் வகுப்பு வாரியாக நிர்ணயத் துள்ளது. 1, 2 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பள்ளிகளில் வீட்டுப் பாடம் அளிக்க கூடாது, 1, 2 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மொழிப் பாடம், கணிதம் தவிர்த்து வேறு எந்த பாடங்களையும் பள்ளிகள் கற்பிக்கக் கூடாது.

**புனித யோசேப்பு, கடவுளின் எழுத்தராக பணியாற்ற வில்லை:** புனித யோசேப்பு, கடவுளின் எழுத்தராக பணியாற்றவில்லை, மாறாக அன்னை மரியாவின் அன்பு மிகுந்த கணவராக வாழ்ந்தார் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் TV2000 என்ற தொலைக்காட்சியில் அளித்த பேட்டியில் கூறினார். அருள்நிறை மரியாவே வாழ்க என்ற தலைப்பில், திருத்தந்தை வழங்கிவரும் சிந்தனைகள், ஒவ்வொரு செவ்வாயன்றும் இரவு 9 மணிக்கு, TV2000 தொலைக்காட்சியில், வத்திக்கான் ஊடகத் துறையின் ஒத்துழைப்புடன் ஒளிபரப்பாகி வருகின்றன. இந்தத் தொலைக்காட்சித் தொடரில், இச்செவ்வாயன்று பேசிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அன்னை மரியாவுக்கும், யோசேப்புக்கும் இருந்த உறவு குறித்தும், அவருக்கும் குழந்தை இயேசுவுக்கும் இருந்த உறவு குறித்தும் தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார். குழந்தை இயேசு நாசரேத்தில் வளர்ந்து வந்த வேளையில், அவரைக் குறித்த முக்கியமான முடிவுகளை புனித யோசேப்பு எடுத்திருக்க வேண்டும், ஏனெனில் அவர்தான் மரியாவின் கணவராக, திருக்குடும்பத்தின் தலைவராக பொறுப்பேற்றிருந்தார் என்று திருத்தந்தை தன் பேட்டியில் குறிப்பிட்டார். தங்கள் மகன் இயேசுவைக் குறித்து ஊரார் என்ன சொன்னாலும், அவற்றைப் பொருட்படுத்தாமல், தங்கள் மகன் மீது முழு நம்பிக்கை கொண்டு யோசேப்பும், மரியாவும் அவரை வளர்த்து வந்தனர் என்பதையும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் தொலைக்காட்சித் தொடரில் எடுத்துரைத் தார். - வத்திக்கான் செய்தி

**34வது உலக இளையோர் நாள் திருத்தந்தையின் பயண விவரம்:** வரும் சனவரி மாதம் பானமா நாட்டில் நடைபெறவிருக்கும் 34வது உலகஇளையோர் நாள் நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் நோக்கத்துடன், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்நாட்டில் மேற் கொள்ளவிருக்கும் திருத்தூதுப் பயணத்தின் விவரங்களை, திருப்பீடம் வெளியிட்டுள்ளது. சனவரி 23, புதன்கிழமை காலை உரோம் நேரம் 9.30 மணிக்கு Fiumicino பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து புறப்படும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏறத்தாழ 13 மணி நேரம் பயணம் செய்து, அன்று மாலை, பானமா உள்ளூர் நேரம் 4.30 மணியளவில் அந்நாட்டின் Tocumen பன்னாட்டு விமான நிலையத்தை அடைவார். சனவரி 24, வியாழனன்று காலையில், அரசுத் தலைவர், அதிகாரிகள் மற்றும் பல்வேறு நாடுகளின் தூதர்கள் ஆகியோரையும், மத்திய அமெரிக்க நாடுகளின் ஆயர்களை சந்தித்தபின், மாலை 5.30 மணிக்கு, இளையோர் உலக நாள் நிகழ்வுகளை அதிகாரப்பூர்வமாகத் துவங்கி வைப்பார் திருத்தந்தை. சனவரி 25, வெள்ளியன்று மாலை 5.30 மணிக்குநடைபெறும் சிலுவைப் பாதை பக்தி முயற்சியும், 26, சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நடைபெறும் திருவிழிப்பு வழிபாடும், 27 ஞாயிறு காலை 8.00 மணிக்கு நடைபெறும் உலக இளையோர் நாள் இறுதி திருப்பலியும், திருத்தந்தையின் பயணத் திட்டங்களில் முக்கியமான நிகழ்வுகளாகும். சனவரி 27, ஞாயிறு மாலை 6.15 மணிக்கு பானமா நாட்டிலிருந்து விடைபெற்று புறப்படும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சனவரி 28, திங்கள் காலை உரோம் நகர் உள்ளூர் நேரம் நண்பகல் 12 மணியளவில் Ciampino விமான நிலையத்திற்கு வந்து சேருவார். - வத்திக்கான் செய்தி

***Printed and Published* on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore, by Rev. Fr. **C.ANTONI ROCHE**, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.